(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 129.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 ஒற்றோபர் 19, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0656/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிலுள்ள பாரிய அரசாங்கத் திணைக்களங்கள் பத்தினையும்,

(ii) அவை எவ்வாறு பாரிய பத்துத் திணைக்களங்களாக் கருதப்படுகின்றன என்பதையும்,

(iii) ஒவ்வொரு திணைக்களத்திலும் இடப்பட்டுள்ள மூலதனத்தினையும் அவற்றுள் தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்,

(iv) இற்றைவரையான கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு திணைக்களத்தினதும் இலாபம் அல்லது நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) ஒவ்வொரு திணைக்களத்தினதும் சந்தைப் பங்கினையும்

அவர் அறியத் தருவாரா?

(ஆ) மேலேயுள்ள திணைக்களங்களில் நட்டத்தில் இயங்குகின்ற திணைக்களங்களை இலாபமீட்டும் திணைக்களங்களாக மாற்றமுடியுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0931/ '10

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தென் மாகாணத்தின் பாடசாலைகளில் தற்போது சுமார் பத்து வருட காலமாக தொண்டர் அடிப்படையில் கடமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் சிலர் எவ்விதமான கொடுப்பனவையும் பெறாது கடமையாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை, கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் எத்தகைய பாடங்களை கற்பிப்பதற்காக ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நாட்டின் வேறு மாகாணங்களில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், தென் மாகாணத்தின் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1040/ '10

3.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) இச்செயற்பாட்டில் உள்ளடங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) வறுமையை ஒழிப்பதற்கான இலக்குகள் தற்போதைய அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1091/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாதாந்தம் ரூபா. 1000/- இற்கு குறைந்த சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு,

(i) ரூபா. 1000/- இற்குக் குறைவாக சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற அனைத்து குடும்பங்களினதும் சமுர்த்திக் கொடுப்பனவு ருபா 1000/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகள் உள்ள அனைத்துக் குடும்பங்களினதும் குழந்தைகளுக்காகவும் ருபா. 1500/- மேலதிக நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) அனைத்து சமுர்த்தி குடும்பங்களுக்கும் ஏதேனும் முயற்சியில் அல்லது தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு ருபா. 100,000/- வரையிலான கடன் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1248/ '11

5\.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கைத்தொழில், வாணிப அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1432/ '11

6\.
கௌரவ அஜித் குமார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0657/ '10

7.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டின் 30 மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எவை என்பதையும்;

(ii) அவை அரசுக்குச் சொந்தமான 30 மிகப் பெரிய தொழில்முயற்சிகளாக எவ்வாறு கருதப்படுகின்றன என்பதையும்;

(iii) ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம், மற்றும் தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்தினதும் இற்றைவரையிலான கடந்த 5 வருடங்களுக்கான இலாப, நட்டத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(v) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் சந்தைப் பங்கு எவ்வளவு என்தையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்சொன்ன தொழில்முயற்சிகளில், நட்டத்தில் இயங்கும் ஒவ்வொன்றையும் இலாபமீட்டும் தொழில் முயற்சிகளாக்க முடியுமா எனக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1250/ '11

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1274/ '11

9.

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச செயலக ஆளுகைப் பிரிவில் அமைந்துள்ள சுமார் நூற்றி ஐம்பது ஏக்கர் வயல்களுக்கு நீர் வழங்குகின்ற வேகெவில அணைக்கட்டு உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதையும்;

(ii) இதனால் தமது பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீரை பெற்றுக் கொள்ள முடியாமல் இப் பிரதேச விவசாயிகள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) வேகெவில அணைக்கட்டை துரிதமாக புனரமைத்து விவசாயிகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனில், அத்திகதி என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1316/11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு ஹில்டன் ஹோட்டல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதை அரசாங்கம் சுவீகரித்தமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் இந்த ஹோட்டலை மீண்டும் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) இதனை கொள்வனவு செய்கின்ற நபர் அல்லது நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவது குத்தகை அடிப்படையிலா அல்லது நிரந்தர அடிப்படையிலா என்பதையும்;

(v) மேற்படி கொள்வனவு எவ்வளவு காலத்திற்கு நடைமுறையிலிருக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1433/ '11

11\.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0687/ '10

12\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டின் மொத்த மின் உற்பத்தியின் அளவையும் அதில் நீர் மின்சாரம் மற்றும் அனல் மின்சாரத்தின் நூற்றுவீதத்தையும்;

(ii) இலங்கை மின்சார சபை (இ.மி.ச) மற்றும் தனியார் துறை ஆகியவற்றினால் உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அளவையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) தவணைக் கொடுப்பனவு, வட்டிக் கட்டணங்கள் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கலாக இ.மி.ச. இற்கு ஏற்படும் மின்சார உற்பத்திச் செலவையும்;

(ii) உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அலகுப் பெறுமதியையும் அதனை தனியார் துறை இ.மி.ச. இற்கு வழங்குவதற்காக செய்துகொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தத்தின் காலப்பகுதியையும்;

(iii) அனல் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவை மேற்கொள்ளத் தவறுதல் பற்றி ஏதேனும் வாசகம் அந்த உடன்படிக்கையில் உள்ளதா என்பதையும்;

(iv) சூரிய வலு மற்றும் காற்று வலுவை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(v) அத்தகைய செயற்பாடுகள் இல்லையெனில், புதுப்பிக்கக்கூடிய அந்த சக்தி மூலங்களை பயன்படுத்தாமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரச துறையினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்;

(ii) தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரம்;

(iii) வர்த்தகத் துறைக்கும் வீட்டுப் பாவனையாளர்களுக்கும் விற்பனை செய்யப்படும் மின்சாரம்

ஆகியவற்றின் அலகொன்றுக்கான சராசரி விலையை அவர் வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1301/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை மற்றும் பெலிஅத்த ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையும் அண்மித்ததாக உள்ள நலகம வில்அத்தர எனும் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த நாமயால ஏரி அமைந்துள்ளது என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டில் மேற்படி ஏரியும், அதனைச் சூழவுள்ள காணிகளும் குடிநீர் கருத்திட்டமொன்றுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி இடத்தில் தங்காலை – பெலிஅத்த இணைந்த நீர் வழங்கும் திட்டம் எனும் பெயரில் நீர் கருத்திட்டமொன்றுக்காக 2005.10.05 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை மேற்படி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் கருத்திட்டத்தின் ஊடாக நீர் வழங்க திட்டமிடப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அதன் வேலைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நீர் வழங்கல் திட்டம் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக தகுந்த முறையியலொன்று தயாரிக்கப்படுமா?

(ii) அவ்வாறாயின், அது யாது?

(ஈ) இன்றேல், ஏன்?

1317/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் விமான சேவைகள் அமைச்சு தற்போது எந்த இடத்தில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த இடமானது நிரந்தர அல்லது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருப்பின் அதற்காக மாதாந்தம் செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிவில் விமான சேவைகள் அமைச்சினை வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் புதிய இடம் யாதென்பதையும்;

(iii) இந்த இடமானது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக மாதாந்தம் செலுத்த வேண்டிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இந்த இடமானது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) இக்கட்டிடத்தின் உரிமையாளர் யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

1434/ '11

15.

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் கல்வி அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை சமூக மருந்தாளர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ ருவன் ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ திலங்க சுமதிபால,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மெத் சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ திலங்க சுமதிபால ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சித் செவன மன மந்தபுத்தியுள்ள சிறுவர் அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 (1) (அ) ஆம் பிரிவின் கீழ், இயற்கைத் தன்மை கெடாத குடிபான வகையினைச் சார்ந்த, விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்டதுமான மதுபான ஏற்றுமதிக்காக, அனுமதி வழங்கல் தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2011 யூன் மாதம் 21 ஆம் திகதிய 1711/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 937)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின் கீழ், உள்நாட்டு மருந்து உற்பத்தி மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில், நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஈதைல் மதுசாரம் தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2011யூன் மாதம் 21 ஆம் திகதிய 1711/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 938)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*11.

நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 15.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

( மதுவரி அறிவித்தல் இலக்கம் 935. )

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

27.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**